# ஐயப்பன் வழிபாடு



ஆக்கம் :- மு. சிவலிங்கம்

இலவச வெளியீடு :- தங்கராசா குருபரன்
(சிறி கண்ணன் ஜுவல் ஹவுஸ். இணுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் வழிபாடு

பரத கண்டத்திற் தொன்றுதொட்டு இன்று வரை சிவ நெறியும் வைஷ்ணவ நெறியும் சிறப்புடன் பல்லோராலும் போற்றப்படுகின்றது. இவை அநாதியானவை. கல் தோன்றி மண் தோன்றி யுகங்கள் பல மாறிவருங் காலங்களிற் தோன்றிய மக்கள் தமது நாகரீகமான பண்பாட்டில் இறைவழிபாட்டை நேசித்தனர். சமய வழிகாட்டலில் மக்கள் தமது வாழ்வையும் சிறப்பித்தனர்.

அநாதியும் அரூபியுமான இறைவன் மக்களை நெறிப்படுத்தவே காலத்திற்குக் காலம் சமய நெறியாளர்களான முனிவர்கள், சித்தர்கள், யோகிகள், மகான்களைத் தோற்றுவித்தார். அவர்கள் வழிபாட்டின் சிறப்பையும் நன்மைகளையும் எமக்கு போதித்து சமய பக்தியை ஏற்படுத்தினர்.

சிவநெறி வேறு வைஷ்ணவ நெறி வேறல்ல. இவை ஒரே ஆன்மீக தத்துவத்தையே எடுத்துரைக்கின்றன. இவற்றுள் ஐயப்பன் வரலாறு புதியதோர் அத்தியாயமாக அமைந்துள்ளது.

தென்னிந்திய கேரள மாநிலத்திற்குப் பரசுராமர் ஷேத்திரம் என்னும் பெயரும் உண்டு. முன்னொரு காலத்தில் பரசுராமர் தாம் வதிவதன் பேரில் தென்னிந்தியாவின் மேல் திசையில் கடலில் அகழ்ந்த இடம்தான் கேரளம். இது ஒரு புண்ணிய பூமியாகும். இப்புனித பூமியைக் காப்பதன் பேரில் மேற்கு மலைத் தொடரின் கீழ்த் திசையில் 18 சாஸ்தாவின் ஆலயங்களையும் மேல் திசைக் கரையோரத்தில் 18 சக்தியின் (பகவதி) ஆலயங்களையும் பரசுராமர் தோற்றுவித்தார்.

கேரளம் - மலையாளம் மலைகளின் நாதன் கயிலை - நாதன் ஆழி ஆலயங்களையும் பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமன் - இவர்கள் இருவரும் இணைந்த போது பிறந்தவன் மலை + ஆழி மைந்தன் - மலையாளி மைந்தன் திரிந்து மலையாள தெய்வமாக (மைந்தனாக) மாறியது.

சாஸ்தாவின் 18 ஆலயங்களுள் சபரிமலை ஐயப்பன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பிரபலமடைந்துள்ளது. கேரளாவில் பகவதி, குருவாயூரப்பன், ஐயப்பன் ஆலயங்களே பிரபலமானவை.

இந்தியாவிலும் வேறிடங்களிலும் ஐயப்பன் ஆலயங்கள் மிகக் கூடுதலாக அமைந்த இடம் கேரளாதான். இதனால் கேரளாவின் புனிதத்தையும் பக்தியையும் உணர முடிகிறது.

யுகங்கள் தோறும் பல அசுரர்கள் தோன்றி மானிடர்களுக்கும் தேவர்களுக்கும் இடையூறு செய்தனர். இறைவனின் அம்சமான சக்திகள் தோன்றி அவ்வப்போது அசுரர்களை வதைத்து யாவரையும் காத்தருளினர் என்பதை எமது புராண இதிகாசங்களிலிருந்த அறிகிறோம்.

ஏறக்குறைய 1100 வருடங்களுக்கு முன் கேரளாவில் உதயணன் என்னும் கொள்ளைக்காரன் வாழ்ந்தான். அவன் பிரபல ஆலயங்களில் தன் திறமையைக் காண்பித்தது போல சபரிமலை ஐயப்பன் ஆலயத்திலும் விக்கிரகங்களை அபகரித்துக் கோயிலையும் தரைமட்டமாக்கினான். மேலும் அவ்வாலயப் பூசகரான விஜயன் என்னும் நம்பூதிரி வேதியரையும் கொன்றான். இக்கொலையைக் கண்ணுற்ற விஜயனின் மகன் ஜயந்தன் என்னும் பாலகன் துக்க மேலீட்டினால் தான் உதயணனைக் கொன்று சபரிமலை ஐயப்பன் ஆலயத்தை மீண்டும் கட்டுவதாகச் சபதம் செய்தான்.

காலங்கள் கடந்தன. ஜயந்தன் வளர்ந்து வாலிப வயதை அடைந்தான். பந்தன நாட்டு இளவரசியுடன் நட்புறவாகிக் காதல்கொண்டு அவளை வேறிடத்திற்கு அழைத்துச் சென்று திருமணம் செய்தான். இல்லற வாழ்வில் நல்லறம் பேணிய புண்ணிய காலத்தில் சாஸ்தா திருவுளங்கொண்டு தாம் அவர்களின் மகனாகப் பிறந்து தந்தையின் சபதத்தை நிறைவேற்றுவதாக அசரீரி மூலம் தெரிவித்தார். உரிய காலத்தில் பொன்னம்பலமேடு என்னுமிடத்திலுள்ள ஒரு குகையில் ஜயந்தன் தம்பதியினருக்கு ஒரு மகன் பிறந்தான். இப்பிள்ளைக்கு ஐயப்பன் எனப் பெயர் சூட்டிய பெற்றோர் அவனை நன்கு அரவணைத்து வளர்த்து வந்தனர்.

ஐயப்பன் வாலிப வயது வந்ததும் பந்தன நாட்டு மன்னனிடம் பணியாற்றி வந்தான். விதிவசத்தால் கண்ணிற் தென்பட்ட உதயணனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயப்பன் தனது உதவியாட்களுடன் சென்று கொன்றான். தொடர்ந்து சபரிமலையில் கோயில் நிறுவும் பணியும் நடந்தது. உதயணனைக் கொன்றதும் ஐயப்பன் சபரிமலைக்கு தன் படைவீரர்களுடன் சென்றான். அங்கு "சரங்குத்தி" என்னுமிடத்தில் தமது ஆயுதங்களை ஒப்படைத்து சரணாகதி அடைந்தான். (இறைவனிடம் தம்மை அர்ப்பணித்து சரணாகதி அடைவதை இன்று வரை யாவரும் பின்பற்றும் அமைவாகவே உணர்த்துகிறது)

தொடர்ந்து யாவரும் இறையருளை வேண்டிநிற்க ஐயப்பன் ஆலயத்தில் அமைந்த 18 படிகளையும் தாண்டி கருவறையை அண்மித்தான். உடனே தாமே ஒரு ஒளிவட்டமாகி கருவறையிலுள்ள மூர்த்தியுடன் இரண்டறக் கலந்தான். இவ்வரிய நிகழ்வின் மூலம் மானிடராகப் பிறந்து செயற்கரியன செய்து தெய்வமாக உயர்ந்த சிறப்பு ஐயப்பனுக்கே உண்டு என்பதை யாவரும் அறிந்ததால் ஐயப்ப வழிபாடு நன்கு பரவி வருகிறது.

சபரிமலை ஐயப்பன் ஆலயம் அடர்ந்த காட்டின் நடுவே அமைந்துள்ளது. அந்நியர் ஆட்சியினால் ஏற்பட்ட மாற்றத்தினால் இந்து சமய வளர்ச்சி குன்றியது. காடுகள் ஓங்கி வளரவும் வனவிலங்குகளின் பெருக்கமும் காடுகளின் மத்தியிலுள்ள ஆலய வழிபாடும் அருகியது. மக்கள் நடமாற்றமும் அற்ற நிலை தோன்றியது. இச்சூழல் தேடுவாரற்ற பிரதேசமாக அமைந்தது. வனபரிபாலன அதிகாரிகள் மட்டும் அவ்வப்போது காடுகளினூடாகச் சென்று வந்தனர்.

இறையருள் கைகூடவும் ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சபரிமலை ஆலயம் சிறப்புடனே இயங்க ஆரம்பித்தது. மக்கள் கூட்டமும் பெருகியது. ஐயப்பன் வழிபாடு சிறப்படைந்தது. ஆலயம் புணர்நிர்மானம் செய்யப்பட்டு வழிபாடு செய்வோரின் பக்தியும் அதிகரித்தது.

உலகெங்கும் பரந்து வாழும் ஐயப்ப சுவாமியின் பக்தர்கள் சபரிமலை ஐயப்பன் ஆலயத்தின் புதுமையையும் அற்புதத்தையும் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசிக்க ஆர்வங் கொண்டனர். உல்லாசப் பயணிகள் (வேற்று மதத்தினர் உட்பட) இவ்வாலயத்தினாற் கவரப்பட்டனர். இந்திய அரசும் மக்களின் நன்மை கருதிப் பல அபிவிருத்திகளையும் செய்தனர். வேண்டிய பல்வேறு வசதிகளையும் தேடித்தந்தனர்.

இன்று சபரிமலை ஐயப்பன் வழிபாடு உலகப்பிரசித்தி பெற்று விளங்குகிறது. வருடந்தோறும் சபரிமலையில் ஐயப்ப சுவாமியின் மகர சோதி சிறிது நேரம் வானில் தென்பட்டு அற்புதக் காட்சியாக அமைகிறது. இவ்வரிய காட்சியைக் காணவென்றே வருடந்தோறும் லட்சோபலட்சம் பக்தர்கள் சபரிமலை ஐயப்பன் ஆலயத்தில் கூடி தரிசனம் பெறுகின்றனர். மேலும் இவ்வரிய காட்சியையும் ஐயப்பன் ஆலய விழாவினையும் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பி மக்களைக் கண்டுகளிக்க வைக்கின்றனர்.

ஐயப்பன் வழிபாடு கேரள மாநிலத்திற் தோன்றிப் பிரபலமான பல ஆலயங்கள் தோற்றுவிக்கப்பட்டன. மக்களின் பக்தி ஆர்வத்தினால் பாரெங்கும் பல ஆலயங்கள் அமையவும் ஐயப்ப வழிபாடு பிரகாசிக்கவும் தொடங்கியது. எமது இலங்கையில் குறிப்பாக யாழ் மண்ணில் கிராமங்கள் தோறும் பல ஐயப்பன் ஆலயங்கள் அமைந்துள்ளன.

தூய சிந்தனையில் வழிபாட்டினை உரிய விரத ஒழுக்கப்படி கடைப்பிடித்து இறையருளை நாடுகின்றனர். இறைவன் எல்லா இடங்களிலும் குறிப்பாக ஆலயங்களில் மட்டுமன்றித் தூய பக்தர்களின் உள்ளங்களிலும் உறைந்துள்ளார். ஐயப்ப சுவாமியின் பக்தி நெறி பல தத்துவங்களையும் அற்புதங்களையும் எமக்கு உணர்த்துகின்றது. இவ்வழிபாட்டுக்கெனச் சில நெறிமுறைகளையும் கடைப்பிடிக்க வேண்டிய சில விதி முறைகளையும் வகுத்தள்ளனர்.

ஐயப்பன் வழிபாட்டில் ஐயப்பன் வரலாற்றையும் வரலாற்றின் யாத்திரை விதி முறைகளையும் இதன் வேறொரு பந்தியில் அறிவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்பன் வரலாறு

பழைய திருவிதாங்கூர் என்னும் புண்ணிய பூமியில் பந்தன நாடு மிகவும் சிறப்புடையது. இந்த நாட்டில் முன்னொரு காலத்தில் இராஜசேகரபாண்டியன் என்னும் மன்னன் செங்கோலோச்சினான். இந்த மன்னன் ஒரு சிறந்த சிவபக்தன். நாட்டு மக்களை அன்பாகவும் நீதியாகவும் நன்கு அரவணைத்து மனநிறைவுடன் வாழும் வண்ணம் அரசாண்டான்.



மன்னனின் செங்கோலாட்சியால் வானம் பொய்க்காது மாதம் மும்மாரி பொழிய நாடு வளம் பெற்று விளங்கியது. மன்னரின் சீரிய பண்புக்கேற்ற அன்பான அழகிய பட்டத்து இராணியும் அறவழி நாடி குடிமக்களுக்கு மன்னன் வளங்கும் அரசியற்பாணிக்கு உறுதுணையாக அமைந்தான். நாட்டில் சிவநெறி பிரகாசித்து இறையருளால் நீதி தேவதையும் இயற்கை அன்னையும் கைகொடுக்க நாடு வளம் பெற்றது. குடி மக்களும் மன்னராட்சியின் சிறப்புணர்ந்து அரச குடும்பத்தின் மீது அன்பும் விசுவாசமும் வைத்துப் போற்றி வாழ்ந்தனர்.

மன்னன் சிவ நெறிபேணி அறப்பணி நாடிச் சகல சிறப்புகளுடன் வாழ்ந்தபோதும் தமக்கென ஒரு மழலைச் செல்வம் இல்லையென ஏங்கினான். மன்னனும் இராணியும் தமது கவலையை நீக்குமாறு சிவபிரானிடம் பக்திபூர்வமாக இடையறாது வேண்டினர். மன்னனின் கவலையை நீக்குமாறு குடிமக்களும் இறைவனைப் பிரார்த்தித்தனர்.



அரக்கர் குலத்தவனான மகிஷாசுரன் என்பவன் பிரமதேவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிப் பன்னெடுங்காலம் கடுந்தவம் புரிந்தான். அரக்கன் தீயசிந்தனையுடன் தவமிருந்து வரம் பெற்றால் விண்ணுலகத்தோருக்கும் மண்ணுலகத்தோருக்கும் நேருடும் ஆபத்தை எண்ணிய பிரமா அசுரனின் தவத்தைக் கலைக்க எத்தனித்தார். அசுர தவம் உறுதியாக இருந்தது. பிரம்மா அவன் முன் தோன்றி யாது வரம் வேண்டுமெனக் கேட்டார். அசுரன் மனம் மிக மகிழ்ந்து தனக்கு இப்பிறவியில் இம்மண்மீது பிறந்த எவராலும் மரணம் ஏற்படக் கூடாதெனக் கேட்டான். பிரம்மனும் மகிஷன் கேட்ட வரத்தை தந்து மறைந்தருளினார்.

அசுரன் தான் பெற்ற வரத்தின் பெருமையை நன்குணர்ந்து தனக்கு இறப்பே இல்லையென்ற இறுமாப்பில் விண்ணிலும் மண்ணிலும் வாழ்வோரைக் கொடுமைப்படுத்தி இன்புற்றான். அசுரனின் தவறான கொடும்போக்கில் தேவர்களும் மானிடர்களும் பல கொடுமைகளுக்கு இலக்காகி செய்வதறியாது துன்புற்றனர்.

அசுரனின் கொடுஞ்செயலைப் பொறுக்க முடியாத தேவர்கள் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மும்மூர்த்திகளிடம் சென்று முறையிட்டனர் மும்மூர்த்திகள் தாம் தனித்து அசுரனை அழிக்க முடியாதென உணர்ந்தனர். தேவர்களதும் மானிடர்களதும் நன்மை கருதிய மும்மூர்த்திகள் தமது சக்திகைளை ஒன்றிணைத்து சண்டிகா தேவி என்றும் சக்தியைத் தோற்றுவித்தனர். சண்டிகாதேவி தமது எட்டுக் கரங்களிலும் கூரிய ஆயுதங்கள் ஏந்திய வண்ணம் சிங்க வாகனத்தின் மிதேறி மகிஷாசுரன் முன் தோன்றினார் இருவருக்குமிடையே கடும் போர் நடைபெற்றது. சண்டிகாதேவி மகிஷனைக் கொன்று யாவரையும் துன்பம் நீங்கி வாழ அருள்புரிந்தார்.



மகிஷனின் உடன் பிறவாச் சகோதரியான மகிஷி என்னும் அசுரப் பெண் தனது அண்ணன் அழிந்ததால் கடுஞ் சீற்றங் கொண்டாள். இக் கொலைக்குக் காரணமான தேவர்களை அழிக்கச் சித்தங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாள். தேவர்களை அழிக்கும் சக்தியைப் பெறுவதன் பேரில் பிரம்மாவை வேண்டிக் கடுந்தவம் புரிந்தாள். அவளின் தவ வலிமையை மெய்ச்சிய பிரம்மா அவள் முன் தோன்றி வேண்டும் வரம் யாதெனக் கேட்டார். அவள் பிரம்மாவை வணங்கித் தனக்கு சிவனுக்கும் விஷ்ணு விற்கும் பிறக்கும் மகனாலன்றி வேறெவராலும் மரணம் ஏற்படக் கூடாதென்ற வரத்தைப் பெற்றாள்.



பிரம்மாவும் வரந்தந்து மறைந்தார். மகிஷி தனது வரத்தின் பெருமையால் தேவலோகஞ் சென்று தேவர்களைத் துன்புறுத்தினாள்.

சகல பேறுகளையும் பெற்று இன்புற்று வாழ்ந்த தேவர்கள் மீது முன்னொரு காலத்தில் துர்வாச முனிவருக்குச் சினம் ஏற்பட்டது. இதனால் துர்வாச முனிவர் இட்ட சாபத்தினால் தேவர்களுக்கு நரை ஏற்பட்டது. இதனால் வருந்திய தேவர்கள் தமது கவலையை நீக்குமாறு மகாவிஷ்ணுவை நாடினர். தேவர்கள் மீது இரங்கிய மகாவிஷ்ணு சாபத்தினால் நீங்கிய நரை நீங்குவதற்காகப் பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுக்குமாறு ஆலோசனை கூறினார். தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்த போது தோன்றிய அமுதத்தை அசுரர்கள் கவர்ந்து சென்றனர். உடனே மகாவிஷ்ணு மோகினி வடிவில் அசுரர்களுக்கு முன் தோன்றினார். அசுரர்கள் மோகினியின் அழகில் மயங்கவும் அவள் அமுதத்தைக் கவர்ந்து வந்து தேவர்களிடம் தந்தார்.



மோகினியின் அழகைக் காண வந்த சிவன் அவள் மீது மையல் கொண்டு இணைந்த போது ஒரு குழந்தை உருவாகியது. சிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அக்குழந்தைக்கு ஒரு மணிமாலையைக் கழுத்தில் அணிவித்து பூலோகத்தில் குழந்தை வரம் கேட்ட இராஜசேகரனுக்கு கிடைக்குமாறு காட்டினருகே வைத்தார்.

இராஜசேகரன் தன் பரிவாரங்களுடன் வேட்டைக்குச் சென்றான். பம்பா நதிக்கரையோரம் ஒரு குழந்தை அழும் சத்தம் கேட்டது. இக் குழந்தையைக் கண்டதும் அருகே சென்று இது யார் குழந்தை எனத் தடுமாறினாள். அச்சமயம் ஒரு முனிவர் அங்கு தோன்றி மன்னவா உனது குழந்தை இல்லாக் கவலையை நீக்கவென்றே இக்குழந்தை அவதரித்தது இதனை எடுத்துச் சென்று அன்போடு வளர்த்து வா சிறப்படைவாய் இதன் கழுத்தில் மணிமாலை இருப்பதால் மணிகண்டன் எனப் பெயரிடுமாறும் பன்னிரண்டு ஆண்டுகளின் பின் இவன் யாரென அறிவாய் எனக் கூறி மறைந்தார். தமது கையிற் கிடைத்த குழந்தையை மன்னன் மகிழ்வுடன் எடுத்துச் சென்று தன் மனைவியிடம் ஒப்படைத்தான் புத்திரப்பேறு இன்றி கவலையுடன் வாழ்ந்த அரச தம்பதியினர் பெரு மகிழ்வோடு மணிகண்டனை அரவணைத்து வளர்த்தனர். அரசருக்கு ஒரு வாரிசு கிடைத்தால் குடி மக்கள் அனைவரும் இன்பக் கடலில் மூழ்கினர். ஆனால் பிள்ளை இல்லாத அரசபோகத்தைத் தான் எடுக்க எண்ணிய பந்தன நாட்டுத் திவான் மனதில் பொறாமையும் வஞ்சகமும் குடி கொண்டது.



அரண்மனையில் அரவணைப்புடன் வாழ்ந்த மணிகண்டன் மழலைப் பருவம் மாறி கல்வி கலை கற்கும் பருவம் அடைந்தான். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருவிடம் ஒப்படைக்கப்பட்ட மணிகண்டன் சகல வித்தைகளையும் சிறந்த முறையில் கற்றுத் தேறினான். இவனின் திறமையை உணர்ந்த குரு மணிகண்டன் ஒரு தெய்வமகன் என அறிந்தார். கற்று முடிந்ததும் பெற்றோரிடம் செல்ல முன் குருதட்சணையாக என்ன வேண்டும் என சீடன் வினா எடுத்தான். மணிகண்டனை நோக்கிய குரு தனது மகன் கண்பார்வையற்றும் பேச்சுத்திறனும் அற்றிருப்பதால் அவனைச் சுகப் படுத்தினால் போதும் என்றார். மணிகண்டன் முனிவரின் மகனை ஆசீர்வதித்துக் கண்பார்வையையும் பேச்சுவன்மையையும் தந்து இந்த நிகழ்வை வேறெவரிடமும் கூற வேண்டாம் எனவும் கூறிக் குருவை வணங்கி விடை பெற்றான்.

சிறிது காலம் செல்ல மகாராணிக்கு ஒரு புதல்வன் பிறந்தான். கலைகள் வித்தைகள் பயின்று பன்னிரண்டு வயதடைந்ததும் மணிகண்டனுக்கு முடிசூட்ட மன்னன் ஏற்பாடுகள் செய்தான். இச்சமயத்தில் ஏற்கனவே நெஞ்சில் வஞ்சையைச் சுமந்த திவான் மணிகண்டனுக்கு நஞ்சு கொடுத்து அழிக்க முற்பட்டான். அது கைகூடவில்லை. இராணியிடம் சென்று பட்டத்து இராணியான உன் மகனை விட்டு வளர்ப்பு மகனுக்கு முடிசூட்டுவது முறையல்ல என்னும் வஞ்சனையை அவளிடம் வளரச் செய்தான். இராணி



சதித்திட்டத்தின்படி செயற்பட முற்பட்டாள். ஏற்கனவே தீட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சதித்திட்டப்படி இராணி தலைவலி தாங்காது வேததனையடைந்தபோல் நடித்தாள். திவானின் யோசனைப்படி இராணியிடம் அனுப்பப்பட்ட வைத்தியர் இத் தலைவலியை புலிப் பால் கொண்டுதான் மாற்ற முடியும். உடனடியாக புலிப்பால் எடுத்து வருமாறு வைத்தியர் சொன்னார். மனிதன் புலிப்பால் கொண்டுவருவது முடியாத காரியம் என உணர்ந்த மன்னன் புலிப்பால் கொண்டுவருபவருக்குத் தனது இராச்சியத்தில் அரைவாசியைத் தருவதாக அறிவித்தார். பலர் முயன்றும் கைகூடவில்லை. அரசன் மனவேதனையுடன் இருந்தபோது மணிகண்டன் தான் புலிப்பால் கொண்டுவருவதாக புறப்பட்டான். தனது பன்னிரண்டாம் வயதில் சிறு பிள்ளையைக் காட்டுக்கு அனுப்ப மன்னன் மறுத்தான். ஒரு தாயின் தேவைக்காகத் தான் அவசியம் சென்றுவர விடை கேட்டான். மன்னன் மனம் மறுத்தாலும் மணிகண்டனின் வேண்டுதலின் பேரில் செல்லுமாறு கூறினான்.



புலிப்பாலுக்காகக் கானகஞ் சென்ற மணிகண்டனுக்கு துணைபுரிவதன் பேரில் சிவபிரான் பூதங்களை அனுப்பினார். துர்வாச முனிவரின் சாபத்திலிருந்து நரை விலக அமுதினை உண்ட தேவர்கள் மீது சினமுற்ற மகிஷிசொர்க்கத்திற்குச் சென்று





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிஷிசொர்க்கத்திற்குச் சென்று தேவர்களைத் துன்புறுத்தினாள். இதையறிந்த மணிகண்டன் அங்கு சென்று போரிட்டுக் கொன்றான். தன் கடமை முடிந்ததும் புலிகளைத் தேடிச் சென்றான்.



மணிகண்டன் மகிஷியைக் கொன்று தமக்கு உதவிய நன்றிக்காக இந்திரன் முதலிய தேவர்கள் புடைசூழ சிவபிரான் அவ்விடம் தோன்றி மணிகண்டனுக்கு வாழ்த்துக் கூறினர். மேலும் இந்திரன் ஆண்புலியாகவும் தேவர்கள் பெண்புலிகளாகவும் வடிவெடுக்குமாறு இறைவன் கூறினார். ஆண்புலி மீது மணிகண்டன் அமர்ந்து செல்லப் பெண்புலிகள் புடைசூழ்ந்து அரண்மனையை அடைந்தனர். நகரினுட் புலிகள் வந்தது கண்டு யாவரும் வியப்புடன் அச்சமடைந்தனர். குடிமக்கள் பயந்து சிதறி ஓடவும் மணிகண்டன் புலிமீதமர்ந்து வருவதை தொலைவிலிருந்தே நோக்கிய மன்னன் இவன் ஒரு சாதாரண மனிதனல்ல. பன்னிரண்டு வயதில் இவன் யாரெனத் தெரியுமென அன்று முனிவர் கூறியதை உணர்ந்த மன்னன் மாளிகையின் முற்றத்திற்கு வந்தான்.

தந்தையைக் கண்ட மணிகண்டன் புலியிலிருந்து பாலை எடுத்து அன்னைக்குக் கொடுத்து முதலில் நோயைக் குணப்படுத்துங்கள் பின்னர் புலிகளை அனுப்பி வையுங்கள் என்றான். மன்னன் மணிகண்டனின் காலில் விழுந்து வணங்கிய வண்ணம் "பகவானே! மேலும் என்னைச் சோதிக்க வேண்டாம் புலிகளை அனுப்பி வையுங்கள். நீங்கள் காட்டுக்குச் சென்ற பின் தான் இங்கு நடந்த சதித்திட்டம் எனக்குப் புரிந்தது. நான் தவறு செய்திருந்தால் மன்னித்துவிடுங்கள்" என்று மன்றாடினார்.



மன்னன் கூறியதைக் கேட்ட மணிகண்டன் இதில் மன்னிப்பதற்கு ஏதுமில்லை. இவையாவும் என்சித்தப்படியே நடந்தன. பூமியில் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதாரம் ஏன் நிகழ்ந்ததோ அப்பணி நிறைவேறிவிட்டது. நான் தேவலோகஞ் செல்கிறேன் என்றான்.



மன்னன் மணிகண்டனை நோக்கிப் பகவானே! தாங்கள் எங்களுடன் இருந்ததற்காக உங்களுக்கு ஒரு கோயில் கட்டி வழிபட உள்ளோம். கோயில் கட்டும் இடத்தை எமக்குக் காண்பிக்க வேண்டுமென்றார். அப்போது மணிகண்டன் ஒரு வில்லில் அம்பைத் தொடுத்து அந்த அம்பு எந்த இடம் போய் விழுகிறதோ அதே இடந்தான் தகுந்த இடமாகும். என்று கூறி அம்பை எய்தான் அந்த அம்பு சபரி மலையில் விழுந்தது. அந்த இடத்தில் பதினெட்டுப் படிகளுடன் கிழக்கு நோக்கிய வண்ணம் கோயிலையும் தனக்கும் புறத்தம்மனுக்கு ஒரு மாளிகை கட்டும்படி கூறிவிட்டு மணிகண்டனுடன் தேவலோகத்துக்கு சென்றான்

மணிகண்டனின் கட்டளைப்படி மன்னன் ஊண் உறக்கமின்றி தனது மேற்பார்வையில் சபரிமலையில் பதினெட்டுப் படிகளுடன் கூடியஅற்புதமான திருக்கோயிலைக் கட்டி நிறைவு செய்தான். பெருந்திரளான மக்கள் வருடந்தோறும் இனமத பேதமின்றி மாலையணிந்து பயபக்தியுடன் ஆசார சீலர்களாக நாற்பத்தொரு நாட்கள் விரதமிருந்து வருகின்றார்.

கோயிற்காணிக்கைக்காக நெய் தேங்காய் மற்றும் பொருட்களை ஒரு முடிச்சாகவும் கோயிலில் தங்குவதற்கான (தமது தேவை) வேறொரு முடிச்சாகவும் கட்டித் தலைமீது சுமந்து வருவர்.



இரு முடி கட்டி ஐயப்பன் ஆலயம் நோக்கிவரும் பக்தர்களின் ஆத்ம சக்தி இன்று சிறந்த ஐயப்பன் வழிபாடாக அமைந்தமை இறையருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபரிமலை யாத்திரை விதிமுறைகள்

❊108 அல்லது 54 மணிகள் கொண்ட உத்திராட்சம் அல்லது துளசி மாலையில் ஐயப்பனின் திருவுருவப் படமமைந்த பதக்கமும் இணைந்த மாலை அணிதல் வேண்டும். மேலும் ஒரு துணை மாலையேனும் அணிதல் வேண்டும்.

❊நான்குவித ஆச்சிரம ஒழுக்கங்களுக்கு அமைவாக ஐயப்பன்கள் (பக்தர்கள்) நீலநிற ஆடை அணிய வேண்டும். கர்நாடகா, ஆந்திரா, மகாராஷ்டிரா ஐயப்பன்மார்கள் மஞ்சள் நிற ஆடை அணிய வேண்டும். கறுப்பு, பச்சை, காவி நிற ஆடைகள் ஒரு போதும் அணியக் கூடாது. ஐயப்ப பக்தர்கள் யாத்திரையின் பின் வந்து இல்லறத்தில் இணைவதால் துறவிகளுக்கான காவி நிறம் தவிர்க்கப்படும். கறுப்பு நிறம் துக்கத்தை வெளியிடும் நிறமானதாய் தவிர்க்கப்படுகிறது.

❊நாள்தோறும் ஆலய வழிபாடு, நாமசங்கீர்த்தனம் பஜனைகளிற் கலந்து கொண்டு மனதைத் தூய்மையாக்க வேண்டும்.

❊காலை மாலை இருவேளையும் குளிர்ந்த நீரில் நீராட வேண்டும். ஐயப்ப பக்தி வந்ததும் உடல் அபிமானம் போய்விடும் என்பதற்காக வெந்நீரில் நீராடக் கூடாது.

❊பிரம்மத்தை அடைய பிரம்மச்சாரிய விரதத்தை ஒழுங்குடன் தவறாது கடைப்பிடிப்பது அவசியம். மனம், வாக்கு, செயல் ஆகிய மூன்றிலும் காம இச்சை தவிர்க்கப்பட வேண்டும். காம இச்சையினால் யாத்திரிகரின் உடலும் உள்ளமும் சோர்ந்து தீய எண்ணங்கள் தோன்றும். பலவீனம் ஏற்படும். இது சபரிமலை யாத்திரிகைக்குப் பங்கமாகும்.

❊குடை, காலணிகள் உபயோகிப்பது, எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, முகச்சவரம் செய்வது, புலால் உண்பது, குளிர்பாணங்கள் அருந்துதல், பொய், களவு, சூது செய்வது, மது அருந்துவது, புகைப் பிடிப்பது, வேடிக்கை தொலைக்காட்சி, திரைப்படங்கள் பார்ப்பது, பெண்களுடன் கலந்தரையாடுவது, போதைப்பொருள் பாவிப்பது யாவும் தவிர்க்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❄பகல் நேர உறக்கம் தவிர்க்கப்பட வேண்டும். இரவில் ஒரு துண்டை மட்டும் விரித்து அதில் உறங்க வேண்டும்.

❄மாலை அ நிந்ததும் நேரில் சந்திக்கும் ஆண்களை "ஐயப்பா" எனவும் பெண்களை "மஞ்சமாதா" எனவும் சிறுவர்களை "ஐயப்பன்" எனவும் சிறுமிகளைக் "கொச்சி" எனவும் அழைக்க வேண்டும். பிறரிடம் பேசும் போது "சாமியே சரணம்" எனத் தொடங்கி விடைபெறும் போது "சாமி சரணம்" எனச் சொல்லி வர வேண்டும்.

❄ஐயப்ப பக்தர்கள் காலை மாலை 108 சரண கோசம் சொல்லி துளசி வில்வம் அர்ச்சனை செய்து வெல்லம், பேரீச்சம்பழம், திராட்சை, வாழைப்பழம், பால், வெற்றிலை, பாக்கு இவற்றை வைத்து நெய்வேத்தியஞ் செய்து வணங்குவது சிறப்பாகும்.

❄யாத்திரைக்கு முன்பாக ஐயப்பன்கள் தமது வீட்டிலோ அல்லது குருநாதர் மற்றும் பக்கதர்கள் வீட்டிலோ விரிவான முறையில் சங்கீர்த்தனஞ் செய்து ஆராதனை, அன்னதானஞ் செய்து அருள் பெறுவது அவசியம் "அன்னதானப் பிரவுவே" எனக் கோசமிடுவோம்.

❄மாலை அணிந்த பின் துக்க சம்பவங்களில் கலந்து கொள்ளக் கூடாது. தவிர்க்க முடியாத நெருங்கிய உறவினர் மரணம் ஏற்பட்டால் மட்டும் அணிந்த மாலையை குருநாதரின் மூலம் கழற்றி ஐயப்பன் படத்தில் மாட்டிய பின்புதான் துக்க சம்பவங்களில் கலந்து கொள்ள வேண்டும்.

❄பெண்களின் ருதுமங்கல நிகழ்வில் கலந்து கொள்ளக் கூடாது. மாத விலக்கான பெண்களைப் பார்க்கக் கூடாது. தற்செயலாகப் பார்க்க நேர்ந்தால் உடனே குளித்துவிட்டு ஐயப்பனை வணங்க வேண்டும்.

❄இருமுடி கட்டி பூசையை சொந்த வீட்டிலோ குருசாமியின் வீட்டிலோ, கோவிலிலோ நடத்த வேண்டும். குருவின் அடி தொழுது இயன்ற காணிக்கை வழங்கி குருவின் திருக்கரங்களினால் இருமுடியைத் தலையில் ஏற்றி வீதிக்கு வந்து வாயிற்படியில் சிதறு தேங்காய் உடைத்து ஐயப்பனை வேண்டி சரண கோஷத்துடன் பின்னால் திரும்பிப் பார்க்காமல் பயணம் தொடங்க ஐயப்பன்மார் வீட்டில் உள்ளவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தமாக இருந்து தினம் காலை மாலை சுவாமிப்படத்திற்கு மலர் இட்டு நைவேத்தியம் செய்து தீபம் ஏற்றி வழிபட வேண்டும்.

❄12 வயதிற்குட்பட்ட (பருவமடையாத) சிறுமிகளும் ருது காலம் நின்ற பெண்களும் சபரி யாத்திரையில் கலந்து கொண்டு செல்லலாம்.

❄குருசாமிக்குக் காணிக்கை வழங்கும் போது ஐயப்பன்மார்கள் தங்கள் வசதிக்கேற்றவாறு விரும்பியதைக் கொடுத்து குருவின் ஆசியினைப் பெற வேண்டும்.

❄கன்னி ஐயப்பமார்கள் யாத்திரை புறப்பட்டதிலிருந்து சந்நிதானம் அடையும் வரை தானே தலையிலிருந்து தலைமுடியை இறக்கி வைக்கவோ ஏற்றிக் கொள்ளவோ கூடாது. குருநாதர் அல்லது அதிகமாகச் சபரிமலை சென்று வந்த அன்பர்களைக் கொண்டு செய்தல் வேண்டும்.

❄யாத்திரை செல்லும் அடர்ந்த வனத்தில் யானை, கரடி, புலி போன்ற விலங்குகள் இருக்குமாதலால் கூட்டமாகச் சரணம் சொல்லிக் கொண்டே செல்லுதல் நன்மை பயக்கும். இரவு நேரங்களில் கானகத்தில் மல ஜல காரணங்களுக்குத் தனியே செல்லக் கூடாது. சங்கு ஒலித்தல், வெடி வைத்தல், சரணம் கோஷம் இடுதல் சிறந்த வழியாகும்.

❄குருநாதரும் சீடர்களுக்கு எந்த நிபந்தனையையும் விதிக்கக் கூடாது. ஐயப்பமார்கள் அவர்களாக விரும்பிக் கொடுக்கும் காணிக்கையை மகிழ்வுடன் பெரும் பொருளாக ஏற்று அவைகளை குருவின் குருவான ஐயப்பனுக்கே காணிக்கையாகச் செலுத்துவது சிறந்தது.

❄குருநாதரின் வாக்கை வேத வாக்காக கருதி ஐயப்பமார்கள் கடைப்பிடிக்க வேண்டும். அதே சமயம் குருநாதர்களும் தமது தவ வலிமையினால் வசீகரிக்கும் புன்னகை முகத்துடன் அன்பான வார்த்தைகளால் மற்ற ஐயப்பமார்களைக் கவர்ந்து கட்டுப்படச் செய்வது நல்லது.

❄ஐயப்பனுக்கு சுற்றத்தவர்கள் கொடுத்தனுப்பும் காணிக்கையை சந்நிதானத்தில் செலுத்தி அவர்களுக்கு திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊தெய்வம் மனித உருவில் வரும். பம்பாதிரத்தில் ஏதாவதொரு தாவனத்தில் ஐயப்ப சுவாமி பங்கெடுப்பார் என்ற நம்பிக்கை இருப்பதைக் கலியுகத்தில் கண்கூடாக பக்தர்கள் அனுபவத்தில் உணரலாம்.

❊பதினெட்டாம் படியில் ஏறும்பொழுது கன்னிசாமிகள் முதலாண்டு முதற் படியிலும் மற்றவர்கள் அவரவர் மலையைக் கணக்கிட்டு அந்தப் படியிலும் சிதறுகாய் உடைக்க வேண்டும். சபரிமலையை விட்டுத் திரும்பும் பொழுது கீழ்ப்பக்கமாக அவரவர்கள் மலையைக் கணக்கிட்டு சிதறுகாய் உடைத்து இறங்கிவர வேண்டும்.

❊ஐயப்ப பக்தர்கள் யாவரும் குறிப்பாக கன்னிச்சாமிகள் பெரிய பாதையில் சென்று வருதல் மிகப் பயனுடையது. பெரிய பாதையில் செல்லும் பொழுது மலைகளிலுள்ள பல மூலிகைகளின் சக்தி கலந்த காற்றினைச் சுவாசிப்பதனாலும் பல மூலிகைகளின் சக்தி கலந்த நீரைக் குடித்து குளிப்பதனால் உடல் நலம் ஏற்படுகிறது. பெரிய பாதையில் பல வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஐயப்பனின் லீலா அனுபவங்கள் நடந்து இருக்கின்றன. கடினமான மலை ஏற்றங்களில் செல்லும் பொழுது மனமுருகி உடல் வருந்தி ஐயப்பனைத் தவிர வேறு கதி இல்லையென்ற சரணாகத சாஸ்திரம் பிரபக்தி உணர்வு மேலிட்டு ஐயனின் அருளை வேண்ட அதற்கு மிகுதியான பலன் ஏற்படுவதை பக்தர்கள் உணர முடிகிறது.

❊யாத்திரை முடிந்து வீட்டிற்கு வந்ததும் வாயிற் படியில் மங்கள ஆராத்தி இரு சுமங்கலிப் பெண்கள் எடுத்து பின்பு சிதறுதேங்காய் உடைத்து வீட்டில் உள்ள பூஜை அறையில் வைத்து கர்ப்பூர ஆராத்தியோடு கட்டினை அவிழ்த்து வணங்கிப் பிரசாதங்களை வழங்க வேண்டும். யாத்திரை இனிது நிறைவு பெற்றதும் குருநாதரிடம் மாலையைக் கழற்றி ஐயப்பன் திருவுருவப் படத்தில் அணிவித்து விட்டு விரதத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை தயாரிக்கும் போது ஜெபிக்க வேண்டிய மந்திரம்

ஞான முத்ராம் சாஸ்த்ர முத்ராம் குருமுத்ராம் நமாம்மிஹம்

வனமுத்ராம் சுத்தமுத்ராம் ருத்ர முத்ராம் நமாம்மிஹம்

சாந்த முத்ராம் சாஸ்த்ர முத்ராம் நமாம்மிஹம்

சபர்யாச்ரமஸத்யேன் முத்ராம் பாது ஸதரபிதே

குரு தக்ஷிணயா பூர்வம் தஸ்யாணுக்ர ஹகாரினே

சரணாகத முத்ராக்யம் தவம் முத்ராம் தாரயாம்யஹம்

சின் முத்ராம் கேசரீ முத்ராம் பத்ர முத்ராம் நமாம்யஹம்

சபர்யாசல முத்ராயை நமஸ்துப்யம் நமோநம.

# மாலை கழற்றுவதற்கான மந்திரம்

அபூர்வ மசலா ரோஹி - திவ்யதர்சன காரண

சாஸ்த்ரு முத்ராம் யஹதேவ - தேஹிமேவிரத மோசனம்.

# கற்பூர தீபம் காட்டும் பொழுது ஜெபிக்க வேண்டிய மந்திரம்

தீப மங்கள ஜோதி நமோ நமோ

தூய சபரிகிரிஷா நமோ நமோ

பூரணை புஷ்களை நாதா நமோ நமோ

அருள் தாராய்.

# இருமுடி கட்டும் பூசை

இருமுடி கட்டுப் பூசையை குருசாமி வீட்டிலோ or கோயிலிலோ or குருநாதர் வீட்டில் நடத்தலாம். கன்னிச்சாமி தனித்து இருமுடியைக் கட்டுதல் , தானே மாலை அணிதல் தவிர்க்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் கறுப்பு ஆடை அணிய வேண்டும்?

கறுப்பு ஆடை மங்களகரமற்றது என்றும், துக்க காரியங்களுக்கும் சிலர் அணிகின்றனர் என சிலர் அவலட்சணமாக கருதுகின்றனர். ஐயப்பனுக்கு உகந்தது கறுப்பு நிறமே! கொடிய மிருகங்கள் வாழும் காட்டில் கறுப்பு உடையணிந்த ஐயப்பமார்கள் பளிச்சென்று தெரிவதில்லை. இருள் சூழ்ந்த வேளையில் நாமும் இருளாகவே இருப்போம். அடுத்ததாக கறுப்பு நிற ஆடை அணிந்தவர்கள் ஐயப்பமார்கள் என்று வீட்டுக்கு விலக்கான பெண்கள் தாமாகவே ஒதுங்கிக் கொள்வார்கள்.

## ஏன் படுக்கை தலையணையை நீக்கி சிறு துண்டை மட்டும் தரையில் விரித்து துயில வேண்டும்?

மலைக்கு இவற்றைக் கொண்டு செல்ல முடியாது. அத்துடன் தலையணையும் படுக்கையில் சிந்தனையைத் திசைதிருப்பி மனக்கிலேசம் ஏற்பட்டு விரதபங்கம் ஏற்பட வாய்ப்புண்டு. நம் முன்னோர்கள் படுக்கையிலா உறங்கினார்கள்?

## பாதணி ஏன் அணியக் கூடாது?

காடு மலைகளைக் கடக்கும் போது பாதணி நல்ல பலனைக் கொடுக்காது. சிலவேளைகளில் சறுக்கவும் வாய்ப்புண்டு. அதுமட்டுமன்றி ஐயப்ப பக்தர்களுக்கு ஒரே நியதி ஏழை - பணக்காரன், உயர்ந்தோர் - தாழ்ந்தோர், பெரியோர் - சிறியோர் என்பவை ஐயப்பன் சந்நிதியில் கிடையாது.

ஆம் கலியுகவரதன் அவதரித்து நமது கவலை, கஷ்டங்களை நீக்கி கருணை வடிவமாக சபரிமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஐயப்ப சுவாமியை தரிசிக்க கடுமையான விரதமிருந்து, இருமுடி தாங்கி காடு மலைகளையெல்லாம் கடந்து தரிசன வேட்கையைத் தவிர வேறு எதுவுமின்றி, நாவிற்கினிய சரணங்களை முழங்கி அவன் திருவடியைச் சரணடைவோரை தெய்வமாக்கவல்ல சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் விரத மஹத்துவம் இன்றியமையாததாகும்.

"மனிதனைத் தெய்வமாக்கும் தெய்வம் சுவாமியே சரணம் ஐயப்பா!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஐயப்பன் நூற்றெட்டுச் சரணக் கோவை

ஓம் கன்னி மூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

ஓம் காந்த மலை ஜோதியே சரணம் ஐயப்பா

ஓம் ஹரி ஹர சுதனே சரணம் ஐயப்பா

ஓம் அன்னதானப் பிரபுவே சரணம் ஐயப்பா

ஓம் ஆறுமுகன் சோதரனே சரணம் ஐயப்பா

ஓம் ஆபத்தில் காப்போனே சரணம் ஐயப்பா

ஓம் இன்தமிழ்ச் சுவையே சரணம் ஐயப்பா

ஓம் இச்சை தவிர்ப்பவனே சரணம் ஐயப்பா

ஓம் ஈசனின் திருமகனே சரணம் ஐயப்பா

ஓம் ஈடில்லாத் தெய்வமே சரணம் ஐயப்பா

ஓம் உண்மைப் பரம்பொருளே சரணம் ஐயப்பா

ஓம் உலகாளும் காவலனே சரணம் ஐயப்பா

ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே சரணம் ஐயப்பா

ஓம் ஊழ்வினை அழிப்பவனே சரணம் ஐயப்பா

ஓம் எளியோர்க்கு அருள்பவனே சரணம் ஐயப்பா

ஓம் எங்கள் குல தெய்வமே சரணம் ஐயப்பா

ஓம் ஏழைப் பங்காளனே சரணம் ஐயப்பா

ஓம் ஏகாந்த மூர்த்தியே சரணம் ஐயப்பா

ஓம் ஐங்கரன் தம்பியே சரணம் ஐயப்பா

ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா

ஓம் ஒப்பில்லாத் திருமணியே சரணம் ஐயப்பா

ஓம் ஒளிரும் விளக்கே சரணம் ஐயப்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் ஓங்காரப் பரம் பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஓதும் மறை பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஔடதங்கள் அருள்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் கலியுக வரதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரிமலை சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிவன் மால் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிவ வைணவ ஐக்கியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அச்சங் கோவில் அரசே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆரியங்காவு ஐயாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் குளத்துப் புழைப் பாலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பொன்னம்பல வாசனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வில்லாளி வீரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வீரமணி கண்டனே | சரணம் ஐயப்பா |
| ஓம் உத்திரத்தில் உதித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் உத்தமனே சத்தியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பையிலே பிறந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பந்தள மாமணியே | சரணம் ஐயப்பா |
| ஓம் சகல கலை வல்லோனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாந்தம் நிறை மெய்பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் குரு மகனின் குறைதீர்த்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் குரு தட்சணை அளித்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் புலிப்பாலைக் கொணர்ந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் வன்புலியின் வாகனனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தாயின் நோய் தீர்த்தவனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் குருவின் குருவே | சரணம் ஐயப்பா |
| ஓம் வாபரின் தோழனே | சரணம் ஐயப்பா |
| ஓம் துளசி மணி மார்பனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் இருமுடிப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் எருமேலி சாஸ்தாவே | சரணம் ஐயப்பா |
| ஓம் நித்திய பிரம்மச்சாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் நீலவஸ்திர தாரியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேட்டை துள்ளும் பேரருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாஸ்தாவின் நந்தவனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சாந்தி தரும் பேரழகே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேரூத்தோடு தரிசனமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பேதமையை ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் காளை கட்டி நிலையமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அதிர் வேட்டுப்பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அமுதா நதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் அழுதை மலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஆனந்தமிகு பஜனைப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் கல்லிடும் குன்றே | சரணம் ஐயப்பா |
| ஓம் உடும்பாறைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் இஞ்சிப் பாரைக் கோட்டையே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரியிலந் தோடே | சரணம் ஐயப்பா |
| ஓம் கரிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் கரிமலை இறக்கமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பெரியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சிறியானை வட்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பா நதி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் திருவேணி சங்கமமே | சரணம் ஐயப்பா |
| ஓம் ஸ்ரீ இராமர் பாதமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சக்தி பூஜை கொண்டவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரிக்கு அருள் செய்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தீப ஜோதித் திரு ஒளியே | சரணம் ஐயப்பா |
| ஓம் தீராத நோய் தீர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பம்பா விளக்கே | சரணம் ஐயப்பா |
| ஓம் பழவினைகள் ஒழிப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் தென்புலத்தார் வழிபாடே | சரணம் ஐயப்பா |
| ஓம் திருபம்பையின் புண்ணியமே | சரணம் ஐயப்பா |
| ஓம் நீலிமலை ஏற்றமே | சரணம் ஐயப்பா |
| ஓம் நிறைவுள்ளம் தருபவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் அப்பாச்சி மேடே | சரணம் ஐயப்பா |
| ஓம் இப்பாச்சிக் குழியே | சரணம் ஐயப்பா |
| ஓம் சபரிபீடமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சரங்குத்தியாலே | சரணம் ஐயப்பா |
| ஓம் உரல் குழி தீர்த்தமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கருப்பண்ண சாமியே | சரணம் ஐயப்பா |
| ஓம் கடுத்த சாமியே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஓம் பதினெட்டாம் படியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பகவானின் சந்நிதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் பரவசப் பேருணர்வே | சரணம் ஐயப்பா |
| ஓம் பசுவின் நெய் அபிஷேகமே | சரணம் ஐயப்பா |
| ஓம் கற்பூரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் நாகராசப் பிரவுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் மாளிகைப் புறத்தம்மனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மஞ்சமாதா திருவருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் அக்கினிக் குண்டமே | சரணம் ஐயப்பா |
| ஓம் அலங்காரப் பிரியனே | சரணம் ஐயப்பா |
| ஓம் பஸ்மக் குளமே | சரணம் ஐயப்பா |
| ஓம் சற்குரு நாதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் மகர ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் மங்கள மூர்த்தியே | சரணம் ஐயப்பா |

ஓம் பூதநாதாய வித்மஹே

பவநந்தனாய தீமஹி

தந்தோ சாஸ்தா பிரசோதயாத்

## சாஸ்தா பூஜா பலன்கள்



**1. ஆதி ஸ்ரீ பூதநாதர் (ஐயனார்)**

கிராமம், நகரம், நாடு, வீடு யாவையும் காத்து வருபவர். காலத்தே மழை பெய்து, நீர் வளம் நில வளம் பெருக்கிப் பயிர்கள் செழிக்க அருள்பவர். நீர் நிலைகளைக் காப்பவர் (சுனை காத்த - ஐயனார்). வீட்டு விலங்கினங்களுக்குத் துன்பம், பிணி வராது காப்பவர். காணாமற் போன பொருளைத் திரும்பப் பெற்றுத் தருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதவன் போல இவ்வுலகம் உய்ய அருள் புரிபவர்.

**2. ஸம்மோஹன சாஸ்தா**

நாம் வீட்டில் இல்லாத நேரத்தில் நம் வீட்டையும், குடும்பத்தையும் காத்தருள்பவர். (கைவிடேல் அய்யன்). ஒளி மண்டபத்தில் சந்திரன் போல் தண்ணொளி வீசி மூவுலகையும் வசீகரித்து இல்லற ஒற்றுமை ஓங்கச் செய்பவர். அமுத ஸ்வரூபி.

**3. கல்யாண வரத சாஸ்தா**

தடைப்பட்ட திருமணங்கள் எளிதில் நடைபெற அருள்பவர். செவ்வாய் தோஷத்தினால் ஏற்படும் உபாதைகள் நீங்கச் செய்பவர். மங்களகரமானவர்.

**4. வேத சாஸ்தா**

புததேவன் போல் சாஸ்த்ர ஞானம் அருளி, வேதம் தழைக்க வழி வகுத்து, வேதத்தின் சொற்படி நம்மை நடத்திச் செல்பவர். புத்திமான்.

**5. ஞான சாஸ்தா**

கல்லால மரத்தின் கீழ் 4 சீடர்களுடன் அருளாசி புரிந்து மாணிக்க வீணையைக் கையில் ஏந்தி, மேதா தட்சணாமூர்த்தியாக குரு பகவான் ஸ்தானத்தில் அமர்ந்து, நமக்கும், நம் குழந்தைகளுக்கும் கல்வி அறிவு வளரச் செய்பவர். மூவுலகிற்கும் ஈஸ்வரன்.

**6. ப்ரம்ம சாஸ்தா**

(சந்தானப்ப்ராப்தி நாயகர்)

சந்தானப் ப்ராப்தி நாயகனாக பிரம்ம சாஸ்தாவாக சுக்கிரன் போல் மலட்டுத் தன்மை நீக்கி மகப்பேறு அருள்பவர். எல்லா சாஸ்திரங்களையும் உபதேசிப்பவர்.

**7. ஸ்ரீ தர்ம சாஸ்தா**

நமது தவறுகளைக் களைந்து, பிழை பல பொறுத்து நமக்கு ஞானமும், மௌனமும் உபதேசித்து, நம் அனைவரையும் ஜாதி, மத, இன பேதமின்றித் தடுத்தாட்கொண்டு, நம்மை தன்னுடன் இரண்டறக் கலக்கும் முக்தி நிலை அருள்பவர். சனி உபாதை நீங்கச் செய்பவர். "ஆக்ஞா பீடவாஸி; ப்ருமத்ய பீடவாஸி"

**8. மஹா சாஸ்தா**

வாழ்வில் முன்னேற்றம் அருள்பவர். ராகுவினால் ஏற்படும் க்ரஹதோஷம் நீங்கச் செய்பவர். மகாவீர்யம் உள்ளவர்.


**9. வீர சாஸ்தா**

கேதுவைப் போல் கைகளில் ஆயுதம் தாங்கியும், பரிமீதேறித் தீயவர்களை அழித்தும் மண்ணின் மைந்தர்களைக் காக்கும் மாவீரன். ருத்ர குமாரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறி கண்ணன் ஜுவல் ஹவுஸ்
Sri Kannan Jewel House



K. K. S Road,
Inuvil.

Tel:- 021 4590995
021 3219054
Mobile:- 0779231602

Magudam Associates K.K.S. rd, Inuvil Junction.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org